# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

27.07.2020 திங்கட்கிழமை




## வவுனியாவில் இன்று ரிஷாத் வாக்குமூலம்

வவுனியா,ஜூலை 27
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் , ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் வவுனியா இரட்டைப் பெரிய குளம் பொலிஸ்நிலையத்தில் இன்று காலை வாக்கு மூலம் வழங்கினார்.
ரிஷாத்தை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐடி)கடந்த

6

# கோத்தாபயவின் ஏவலாளிகளான அங்கஜன், டக்ளஸை வீழ்த்துங்கள்!

## தமிழ் மக்களிடம் அறைகூவல் விடுக்கின்றார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஜூலை 27

**கோ**த்தாபயவை நாம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தடவை விரட்டி அடித்துவிட்டோம். ஆனாலும், அவரின் கைக்கூலிகளாக, ஏவலாளிகளாக இங்கு வலம்வருபவர்களையும் இந்தத் தேர்தலுடன் அடித்து விரட்ட வேண்டும். எங்கள் சொந்தங்களை குருதி சிந்த வைத்த கோத்தாவை மறுபடியும் தோற்கடிக்க ஒரு வாய்ப்பு ஓகஸ்ட் 5 ஆம் திகதி உங்களைத் தேடி வருகின்றது. கோத்தாவின் அடியாள்களான டக்ளஸ், அங்கஜனை தோற்கடிப்பதன் ஊடாக அதனை நீங்கள் செய்யவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

6

## புதினம்? தெரியுமோ

இங்கேதான் கட்சிகளுக்கிடையில் உள்ளகரீதியாக ஒரே வெட்டுக்குத்து என்றால் , சிங்களக் கட்சிக்காரர்களும் இதைவிடக் கடுமையாக ஆளுக்கு ஆள் குழி பறிக்கும் கைங்கரியத்தில் இறங்கிவிட்டார்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறி

4

## மன்னாரில் நகைகள் திருட்டு

மன்னார், ஜூலை 27
மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு சற்று தூரத்திலுள்ள மன்னார் பெரிய கடை பகுதியில் ஓர் அரச ஊழியருடைய வீட்டில் நூதனமான

8

வடமராட்சி மீனவர் வழக்கு:

## இன்றும் வராத திணைக்களம்

வடமராட்சி ,ஜூலை. 27
வடமராட்சி கடற்பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து அத்துமீறித் தொழில் செய்வோருக்கு எதிராக வடமராட்சி மீனவர் சங்க சமாசத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நீரியல்வளத் திணைக்களத்தினர் இன்றும் மன்றுக்கு வராமையால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. பருத்தித்துறை

6

## புலிகளின் அரசியல்பிரிவு தலைவரே சம்பந்தன்!

### புதிய பதவி கொடுக்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 27
" தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவரே சம்பந்தன். 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் வடக்கிலுள்ள இனவாத அரசியல்வாதிகளின் கைகளுக்கு முழுமையாகச் சென்றுவிட்டால் தனிஈழம் அமைவதை தடுக்கமுடியாது. எனவே, 13 க்கு முடிவு கட்டவேண்டும்." என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
" 9 ஆவது திருத்தச்சட்டத்துக்கு நான் கடும் எதிர்ப்பை

6

## போதைப்பொருளுடன் பிடிபட்டார் பெண்!

வவுனியா,ஜூலை 27
போதைப்பொருள்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வவுனியாவில் பெண் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சோதனைகளை மேற்கொண்ட விசேட அதிரடிப்படையினர், போதைப்பொ

6

## ஆணின் சடலம் மன்னாரில் மீட்பு

மன்னார், ஜூலை 27
மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள பழைய பாலம் தெற்கு கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கிய ஆண் ஒருவரின் சடலம் ஒன்றை தலைமன்னார் பொலி

8

## சமஷ்டியை கொடுத்திருந்தால் கொரோனா கொன்றிருக்கும்!

### விமல் வீரவன்சவின் கணிப்பு



கொழும்பு, ஜூலை 27
" நாட்டில் சமஷ்டி முறைமை இருந்திருந்தால் கொரோனாவால் வடக்கு, கிழக்கில் பெரும் சீரழிவுகள் ஏற்பட்டிருக்கும். அங்குள்ள மக்களைக் கொரோனா கொன்றிருப்பதோடு நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் கொரோனா பரவியிருக்கும்" என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

6

## வெலிக்கடையில் கைதிக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 27
வெலிக்கடை சிறைச்சாலையில் மற்றுமொரு கைதிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகள் மூலம் உறுதியாகியுள்ளது.
கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவருடன் பழகியவருக்கேஇவ்வாறு கொரோனா தொற்றியுள்ளதென கொரோனா

8

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# நாட்டையும் நாட்டு மக்களையும் இராணுவத்தினரே பாதுகாப்பர்

## மெச்சுகின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 27

எதிர்காலத்தில் நாட்டையும் நாட்டு மக்களையும் இராணுவத்தினரே பாதுகாக்கவுள்ளனர். யுத்த காலத்தைப் போன்று தற்போதும் இராணுவம் மக்கள் மத்தியில் பொறுப்பும் மதிப்பும் உடைய ஒரு நிறுவனமாக உள்ளது. எம் அனைவரிடமும் ஐக்கியம் இருக்கும் வரை அதனை மேலும் பலப்படுத்திக் கொண்டு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் வெற்றி பெறும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமைத்துவத்தில் சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளினதும் ஒத்துழைப்பால் 50 நாள்கள் என்ற குறுகிய காலத்தில் சமூகத்தில் தொற்றுப் பரவாமல் தடுக்க முடிந்துள்ளது. நாட்டில் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு பின்னர் சமூகத்திலிருந்து கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்படவில்லை. எதிர்காலத்திலும் இதேபோன்று சமூகத்தினுள் கொரோனாத் தொற்று பரவாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுகாதார அமைச்சினால் வைத்தியசாலைகளில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் கொரோனா நோயாளர்கள் தப்பிச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. கடந்த வாரம் தப்பிச்சென்ற நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவராவார். கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான அனைவரும் இராணுவத்தினரால் சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் இயக்கப்பட்டுவரும் வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதாரத்துறையினரால் முழு நாட்டுக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசனைகளான முகக் கவசம் அணிதல் , கைகளை அடிக்கடி கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்டவற்றை இராணுவ வீரர்களும் பேணுவது அத்தியாவசியமாகும்.

அத்துடன், வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை எதிர்வரும் வாரங்களில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ரி3)

## மேல் மாகாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது

கொழும்பு, ஜூலை 27

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின்போது 1,100 இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி கைரேகை அடையாளங்களைப் பயன்படுத்தி 93 பேர் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 402 பேர் உட்பட மொத்தமாக 1,119 பேர் கடந்த 24 மணி நேர சோதனை நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ரி3)

## கஞ்சிபானவின் நெருங்கிய சகா கைது

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் பாதாள உலக மற்றும் போதைப்பொருள் கடத்தல் குழுவின் முக்கியஸ்தர்களான மாகந்துரே மதூஷ் மற்றும் கஞ்சிபான இம்ரான் ஆகியோரின் சகாக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனை, மல்வத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 800 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் கஞ்சிபான இம்ரானுக்கு நெருக்கமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை கொட்டாஞ்சேனை, மகா வித்தியாலய மாவத்தையில் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இன்னொருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர் மாகந்துரே மதூஷுக்கு நெருக்கமானவர் எனத் தெரியவந்துள்ளது.

கஞ்சிபான இம்ரான் மற்றும் மாகந்துரே மதூஷ் ஆகியோர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)



## மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து தடை

கொடிகாமம், ஜூலை 27

கொயிலாமனை அண்ணமார் ஆலயத்தின் தலவிருட்சமான நாவல் மரம் முறிந்து விழுந்ததில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் மரத்தில் இருந்த தேனை எடுப்பதற்காக இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயில் எரிந்து சேதமடைந்திருந்த நாவல் மரமே இவ்வாறு முறிந்து விழுந்துள்ளது. ஆலய நிர்வாகத்தினர் முறிந்து விழுந்த நாவல் விருட்சத்தை வெட்டி அகற்றினர். (ரி2-159)

## கொரோனாப் பாதிப்பு 2,782 ஆக உயர்வு

### நேற்று 12 புதிய தொற்றாளர்கள் அடையாளம்

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் நேற்றைய தினம் 12 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,782 ஆக உயர்வடைந்துள்ளது.

சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தில் ஐந்து கைதிகளும், கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் மூன்று கைதிகளும், கட்டாரிலிருந்து வந்த நான்கு நபர்களும் இவ்வாறு புதிய தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது நாடு முழுவதும் ஒன்பது வைத்திய சாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 665 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மூன்று நபர்கள் குணமடைந்து நேற்று மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,106 ஆக உயர்ந்துள்ளது. இதற்கிடையில் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 75 பேர் வைத்திய கண்காணிப்பில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)



வவுனியா சிதம்பரபுரம் பழனி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. (ரி3-222)

# கொரோனாப் பரவல் ஆபத்து நீங்கவில்லை

## எச்சரிக்கின்றது தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் ஆபத்து இதுவரை நீங்கவில்லை என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்தியிலும் சமூகத்திற்குள் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்படலாம் என்று சங்கத்தின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். இதனால் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்றுமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தொற்றுக்குள்ளானவர்கள் அனைவரும், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்குள் அடையாளம் காணப்பட்டுள்ளமையினால் வைரஸைக் கட்டுப்படுத்திய நிலமை ஒன்று இலங்கையில் காணப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ரி2)

## மாலுமிகள் குழு இலங்கை வந்தடைவு

கொழும்பு, ஜூலை 27

வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிந்த இலங்கையர்கள் உட்பட மொத்தம் 55 பயணிகள் இன்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

டோகாவிலிருந்து கட்டார் எயர்வேஸ் விமான சேவைக்குச் சொந்தமான கியூ.ஆர் 668 என்ற விமானத்தின் மூலமாகவே இவர்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த இவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமையுடன், தனிமைப்படுத்தலுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். (ரி2)

## யானை சடலமாக மீட்பு

கெக்கிராவ, ஜூலை 27

கெக்கிராவ கொடாகல பிரதேசத்தில் யானையொன்றின் சடலம் கல்கிரியாகம வனவிலங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

கலாவெவ தேசிய பூங்காவில் காயமடைந்த நிலையில் காணப்பட்ட யானை ஒன்றே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது. 5 வயதுடைய இந்த யானை சுமார் 4 அடி உயரம் கொண்டதென தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்து சிகிச்சை வழங்கப்பட்டிருந்த நிலையில் இந்த யானை கொடாகல பிரதேசத்துக்குள் நுழைந்துள்ளதாகவும் இதன்போது இதை பிரதேச மக்கள் விரட்டி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்தே இந்த யானை மேற்படி பிரதேசத்தி லுள்ள விவசாய நிலத்தில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த யானை காயங்களுடன் இருந்தமையால் தண்ணீர் குடிப்பதற்காக முயன்று இவ்வாறு கிணற்றில் விழுந்திருக்கலாம் எனவும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ரி3)

## இலங்கை அழகியின் மரணத்தில் சந்தேகம்

### சகோதரன் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 27

58 வருடங்களுக்கு முன்னர் இலங்கை அழகியாக தெரிவான, தமது சகோதரியின் மரணம் குறித்து சகோதரன் ஒருவர் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. 1962ஆம் ஆண்டு இலங்கை அழகியாகத் தெரிவான ஜெனிப்பர் இன்ங்லெடென் கடந்த வருடம் மரணமானார்.

எனினும் 78 அகவையைக் கொண்ட அவர் இலங்கையில் வைத்து சந்தேகத்துக்கு இடமான முறையில் மரணமடைந்துள்ளார் என்று லண்டனில் வசிக்கும் அவரின் சகோதரரான டொனி ஹாவ்க் தெரிவித்துள்ளார். தமது சகோதரிக்கு உரிய நேரத்தில் சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. உறவினர்களுடன் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. மேலும் அவருடைய சொத்துக்கள் தொடர்பிலும் தற்போது கேள்வி எழுந்துள்ளது என்று இங்கிலாந்தில் வசிக்கும் ஜெனிபரின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சட்டத்தரணி ஒருவரின் ஊடாக இது தொடர்பில் கொழும்பு பொரளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ரி1)



## இலங்கை முழுவதும் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூலை 27

நாடு முழுவதும் குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் மழையுடனான வானிலை ஜூலை 28 ஆம் திகதி முதல் அடுத்த சில தினங்களுக்குச் சற்று அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ரி2)



'செல்லமுத்து' நாவல் தொடர்பான திறந்த கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கிளிநொச்சியில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் மூத்த, இளைய படைப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். (ரி3-159)

## தேர்தல் சட்ட மீறல்: 24 மணிநேரத்தில் 206 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 27

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

24ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் 25ஆம் திகதி மாலை 4 மணி வரையான காலப் பகுதியில் 206 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அனைத்து முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறுவதுடன் தொடர்பானவை என்று தேசிய தேர்தல் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 993 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவைதவிர 4,080 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## வைத்தியராக நடித்த இந்தியப் பிரஜை விளக்கமறியலில்

நிட்டம்புவ, ஜூலை 27

நிட்டம்புவ, வத்துபிட்டிவெல தள வைத்தியசாலையில் வைத்தியராக நடித்த குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை வத்துபிட்டிவெல வைத்தியசாலையின் பெண் விடுதியில் மருத்துவ உபகரணங்கள் கொண்ட ஒரு பையுடன் நுழைந்துள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு நோயாளியை தான் சந்திப்பதற்காக வருகைதந்ததாக அவர் கூறியிருந்தபோதிலும், வருகை நேரம் முடிந்ததால் வைத்தியசாலை ஊழியர்கள் சந்தேகம்கொண்டு நிட்டம்புவ பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அந் நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது சந்தேகநபர் தான் வைத்தியர் என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டார்.

விசாரணையில் அவர் ஒரு இந்தியப் பிரஜையெனவும் திஹாரியாவில் வசித்து வருகிறார் எனவும், இலங்கைப் பெண்ணை மணந்து பல ஆண்டுகளாக நாட்டில் வசித்து வருகிறார் எனவும் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகள் நிட்டம்புவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரி3)

## மஸ்கெலியா நகரில் 9 கடைகள் உடைத்து திருட்டு

*கொழும்பு, ஜூலை 27*

மஸ்கெலியா நகரிலுள்ள 9 வர்த்தக நிலையங்கள் மர்மநபர்களால் நேற்று உடைக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியா நகர் முழுவதிலும் உள்ள கடைத் தொகுதிகளில் ஆங்காங்கே சுமார் 9 கடைகளுக்கு மேல் உடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடைக்கப்பட்ட கடைகளில் பெறுமதியான பொருள்கள் எவையும் திருடப்படவில்லையெனவும் சிறிய தொகை பணம், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் சிலவுமே திருடப்பட்டுள்ளன எனவும் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ரி1)

## 26,942 பேருக்கு தனிமைப்படுத்தல் நிறைவு

*கொழும்பு, ஜூலை 27*

நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 26,942 நபர்கள் தமது தனிமைப்படுத்தலை நிறைவுசெய்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது நாடு முழுவதும் உள்ள 44 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,556 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## பெத்தியாகொடையில் தீப்பரவல்

*களனி, ஜூலை 27*

களனி, பெத்தியா கொடை பிரதேசத்தில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது. வீட்டுத் தொகுதி ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீயைக் கட்டுப்படுத்துவதற்காக 2 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த தீ விபத்தினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன எனக் கொழும்பு தீயணைப்புச் சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரி2)









# இரண்டு வாரங்களின் பின்னர் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

*கொழும்பு, ஜூலை 27*

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் மேலதிக விடுமுறை வழங்கப்பட்டிருந்த பாடசாலைகள் இரண்டு வாரங்களின் பின்னர் இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காக வழமைக்குத்திரும்பியுள்ளன.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தரம் 11, 12, 13 ஆம் வகுப்பு மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகளுக்கு வருகை தந்திருந்தனர். இதன்படி முகக்கவசம் அணிந்து வந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாடசாலை நுழைவாயிலுக்கு முன்னால் உள்ள இடத்தில் கைகளை கழுவிய பின்னர், அவர்களது உடல் வெப்பநிலை கணிப்பிடப்பட்டது. அதன்பின்னரே அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். சமூக இடைவெளியைப் பின்பற்றி வகுப்பறையில் இட ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

## ஆணொருவர் சடலமாக நேற்று மீட்பு

*கொழும்பு, ஜூலை 27*

கினிகத்தேனை பொல்பிட்டிய பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொல்பிட்டிய சமனல நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகாமையிலிருந்து இந்தச் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

எனினும் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரியவருகிறது.

சடலத்துக்கு அருகில் தலைக்கவசம் ஒன்று காணப்பட்டது என்றும், எனினும் மோட்டார்சைக்கிள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

# மாணவர்களை ஈடுபடுத்தி ஆபாசக் காணொலிகள்

### ஆசிரியர் மறியலில்!

*கொழும்பு, ஜூலை 27*

பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்தி ஆபாச காணொலி எடுத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியர் ஒருவர் எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேலதிக வகுப்பு ஆசிரியருக்கு எதிராக மாணவர்களின் வீடியோக்களை ஆதாரமாகப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சந்தேகநபர் பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவராவார். சந்தேக நபருக்கு சொந்தமான பென் டிரைவ் ஒன்று காணாமல் போனதையடுத்து அதில் இருந்த காணொளிகள் சில சமூக வலைத்தளம் ஊடாகப் பரவ ஆரம்பித்துள்ளன.

அந்த காணொலிகளில் பாடசாலை மாணவர்களின் ஆபாச காணொலிகளும் காணப்பட்ட நிலையில், மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் உடன் விசாரணைகளை ஆரம்பித்து சந்தேகநபரை கைது செய்துள்ளார்.

சந்தேகநபர் பன்னிப்பிட்டிய பிரதேச வீடுகளுக்குச் சென்று மாணவர்களுக்கு ஆங்கில பாடம் கற்பித்தார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரின் வீட்டில் இருந்து பல மாணவர்களின் ஆடைகளையும் பொலிஸார் மீட்டுள்ளமையுடன், கையடக்கத் தொலைபேசியில் மாணவர்களை பயன்படுத்தி எடுக்கப்பட்ட பல வீடியோக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவரை அவரால் எடுக்கப்பட்ட 137 வீடியோக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்தும் இடங்களுக்குச் சென்று மாணவர்களின் புகைப்படம் மற்றும் காணொலிகளை ட்ரோன் கமராவைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ரி1)

## புதினம் தெரியுமோ

சேன வுடன் தொடர்பு வைத்திருந்த எந்தவொரு வேட்பாளர்களுக்கும் வாக்களிக்ககூடாது என சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுவருவதால் மொட்டு சின்னத்தின்கீழ் போட்டியிடும் மைத்திரி அணி உறுப்பினர்கள் கதிகலங்கி நிற்கின்றனர். ஜனாதிபதி மற் றும் பிரதமர் பங்கேற்கும் பிரதான பிரசாரக் கூட்டங்க ளுக்கு சென்றால் திட்டமிட்ட அடிப்படையில் மைத்திரி அணி உறுப்பினர்களுக்கு எதிராக கூச்சலிடும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

மொனறாகலை செவனகல பகுதியில் அண்மையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்றிருந்த மைத்திரி அணியைச் சேர்ந்த ஜகத் புஷ்பகுமாருக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதால் அவர் தர்சமங்கடத்துக்கு உள்ளானார். 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மைத்திரிக்கு ஆதரவாகச் செயற்பட்ட புஷ்பகுமார இம்முறை மொனராகலை மாவட்டத்தில் மொட்டுச் சின்னத்தின்கீழ் போட்டியிடுகின்றார்.

மொட்டுக் கட்சி வேட்பாளர்களின் செயற்பாடுகளால் மனம் உடைந்து போயுள்ள அவர், நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் விழிநீர் வடித்த படியே தனது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினார். பொதுமேடையில் அவர் கண்ணீர் சிந்தியபடி கதைக்கும் காட்சியானது சிங்கள சமூகவலைத்தங்களில் வைரலாகியுள்ளது.

புஷ்பகுமார தேர்தலில் தோற்கமாட்டார், அவரை 5 ஆம் திகதிக்கு முன்னர் கொல்லவேண்டும் என சிலர் கலந்துரையாடியுள்ளனர் என எனக்கு தகவல் கிட்டியுள்ளது. ஒரு மனிதனைக் கொன்றுவிட்டு பெறும் பதவிக்கான பெறுமதிதான் என்ன? இறுதிமூச்சு இருக்கும்வரை மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும். 25 வருடங்களாக அரசியல் செய்கின்றேன். ஐக்கிய தேசி யக் கட்சிக்காரர்களுடன் முட்டி மோதியே அரசியல் செய்யவேண்டிய நிலை இருந்தது. அப்படியிருந்தும் சுதந்திரக்கட்சியைப் பிபிலை தேர்தல் தொகுதியில் பலப்படுத்தினோம். விஜித் விஜிதமுனி சொய்சா கடும் அரசியல் சமரில் ஈடுபட்டார். அதனால் 22 ஆயிரம் வாக்குகளால் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. 3 ஆயிரம் வாக்குகளால் வென்ற மொனராகலை மாவட்டத்தில் சுமேதா ஜயசிங்க கட்சியை பலப்படுத்தியதால்தான் 30 ஆயிரம் வாக்குகளால் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. எனது அர்ப்பணிப்பு காரணமாகவே 55 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறும் நிலை உருவானது. இதனை இன்று சிலர் மறந்துவிட்டனர். கட்சிக்காகவே அரசியல் நடத்தினோம். ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்லவில்லை. 2015 இல் கூட மஹிந்த ராஜபக்சவின் வெற்றிக்காகவே பாடுபட்டோம். தற்போது எம்மை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றனர். விஜித் விஜயமுனி சொய்சாவை விரட்டினர். தற்போது என்னையும், சுமேதாவையும் விரட்டுவதற்கு பார்க்கின்றனர். அதுதான் அவர்களின் இலக்கு. என்று அவர் கதறியுள்ளார். இந்தக் காணொலி ராஜபக்சக்களின் பார்வைக்கும் போயுள்ளது, இப்படிக் கண்ணீர் விட்டு , அனுதாப வாக்குகளால் வெல்லலாம் எனக் கனவு காணாமல் உண்மையாக நடக்குமாறு மைத்திரி மூலமாக அவருக்குச் செய்தி அனுப்பப்பட்டுள்ளதாம். —பட்சி





# விசுவமடுத் திடலில் சீறிப்பாய்ந்த காளைகள்




யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டக் காளைகளுக்கான சவாரிப்போட்டி நேற்று முல்லைத்தீவு விசுவமடு தொட்டியடி சவாரித்திடலில் இடம்பெற்றது. 70 இற்கும் மேற்பட்ட காளைகள் போட்டியில் கலந்துகொண்டன. (ரி1-113)

## சி.ஐ.டியில் ரவி கருணாநாயக்க!



கொழும்பு, ஜூலை 27

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க சாட்சியம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகியுள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் சாட்சியம் பெற்றுக்கொள்வதற்காகவே குற்றப் புலனாய்வு திணைக்க ளத்துக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# அராலி ஓடைக்கரைக்குள கட்டுமானப் பணி விரைவில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

அராலி ஓடைக்கரைக்குளக் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க தேவையான நிதியை வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், யாழ்.வட்டுக் கோட்டை கமக்கார அமைப்பினர், பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஓடைக்கரைக்குளத் தடுப்புச் சுவர் கட்டுமானத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்குமாறு கோரி, பிரதமருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைப் பரிசீலனை செய்த பிரதமர், கட்டுமானப் பணிக்கான நிதியை வழங்குமாறு, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைய அராலி ஓடைக்கரை குளத்துக்கு தடுப்பு சுவர் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட 6.705 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில் கட்டுமான பணிகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ரி2)

## ஹெரோய்னுடன் பெண் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு மட்டக்குளி சமித்புர பிரதேசத்தில் வைத்து ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய இளம் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் நடத்தப் பட்ட விசாரணையில் அவரின் வங்கி கணக்கில் 1.6 மில்லியன் ரூபா பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தப் பணம் போதைப் பொருள்கள் விற்பனையின் ஊடாக இவருக்கு கிடைத் திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)




## றோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக சுரேஷ் சுப்ரமணியம்

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 42 ஆவது தலைவராக சுரேஷ் சுப்ரமணியம் பதவி ஏற்க்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கழகம் சார்பில் திருகோணமலை றோட்டரிக் கழகத் தலைவர் ஆ.உதயராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அத்துடன் நிகழ்வில் ஊடகவியலாளர் சசிகுமார் கௌரவிக்கப்பட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வே. மகேந்திரராஜா, அவரது உரையில் றோட்டரிக் கழகம், இன்னலுற்ற மக்கள் மத்தியில் சிறந்த சேவை புரிவதாக பாராட்டியதுடன் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார நிலை மிகவும் கவலை தரக்கூடிய நிலையில் இருப்பதை மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ரி2)

# வலி.தென் மேற்கு பிரதேச சபையில் பல லட்சம் பெறுமதி பொருள்கள் சூறையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் களஞ்சியத்திய பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருள்கள் பகல் வேளையில் வடி வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.




இச் சம்பவம் குறித்து பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கேள்விக்கணைகளைத் தொடுத்த பிரதேச சபை உறுப்பினர்கள், இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி சபைக்கு அறியத்தருமாறு தவிசாளரையும் செயலாளரையும் கோரியுள்ளனர்.

வலி.தென் மேற்கு பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே பிரதேச சபை உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

மின்சாரப் பொருள்கள் அபகரித்துச் செல்லப்பட்டமை குறித்து அறிக்கையில் இடம்பெறவில்லை. இவை மக்க ளின் சொத்து. விசாரணை இடம்பெற்று சம்பந்தப் பட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சி.சி.ரி.வி கமரா பொருத்தப்பட்டிருந்ததில் என்ன பயன்? காவலாளி எங்கே? என்ற பல கேள்விகளை பிரதேசசபை உறுப்பினர்கள் எழுப்பினர். இது தொடர்பில் பதிலளித்த செயலாளர், இது குறித்து உயரதிகாரிகளால் விசாரணை இடம்பெற்று வருவதாக தெரிவித்துள்ளார். (ரி2-115)

## சீனப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி சாவு

கொழும்பு, ஜூலை 27

பலபிட்டி கடற்பரப்பில் நீராடச்சென்ற சீனப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

23 வயதுடைய சீனப் பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# கோத்தாபயவின்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் ஓரணியாக, ஒரு நிலைப்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கை காட்டிய வழியில் வாக்களித்தார்கள்.
தமிழினப் படுகொலையின் சூத்திரதாரி, இறுதிப் போரின் கொலையாளி யார் என்று தமிழ் மக்கள் கருதினார்களோ அவரை, தங்கள் வாக்கு என்ற ஆயுதத்தால் வெட்டி வீழ்த்தினார்கள். தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தமையால்தான் அது சாத்தியமாயிற்று.
கோத்தாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வெறும் 23 ஆயிரத்து 261 வாக்குகளை மாத்திரம் பெற்றார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலில் தமிழ் மக்கள் வாக்களித்தமையால் சஜித் பிரேமதாச 3 லட்சத்து 12 ஆயிரத்து 722 வாக்குகளைப் பெற்றார். இந்த மாபெரும் வெற்றி எப்படிச் சாத்தியமானது? தமிழ் மக்கள், தாங்கள் வேரறுத்து வீழ்த்த வேண்டியவரை ஓர்மத்துடன் வெட்டிச் சாய்த்தனர்.
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கோத்தாபய, தான் சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் வெல்வேன் என்றும், தனக்கு முழு இலங்கையிலும் வாக்குகள் கிடைக்கப் பெற்றன என்பதை சர்வதேச சமூகத்துக்குக்கு காட்டுவதற்கு தமிழ் மக்களின் ஓரளவு வாக்குகள் கிடைத்தால் போதுமானது என்று பகிரங்கமாகச் சொல்லியிருந்தார். ஆனால் ஜனாதிபதி தேர்தலில் இலங்கை முழுவதும் உள்ள தமிழ் மக்கள் ஓரணியாக நின்று கோத்தாவுக்கு எதிராக வாக்களித்தனர். கோத்தாபய தமிழ் மக்களிடம் அடிவாங்கி மண் கவ்வினார்.

**கோத்தாவுக்கு தமிழர் கொடுத்த அடி**

கோத்தாபயவுக்கு தமிழ் மக்கள் கொடுத்த அடி பலமானது. அந்த அடியை தொடர்ந்தும் தக்க வேண்டும். ஆனால் இப்போது அதை தக்க வைக்கும் வகையில் தமிழ் மக்களின் செயற்பாடுகள் இல்லை என்பதுதான் வேதனைக்குரியது.
நடக்கப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தாபய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும் களமிறங்கியிருக்கின்றார். அதை நாங்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றோம். இன்று இங்கு போட்டியிடும் அங்கஜன், டக்ளஸ் போன்றவர்கள் யார்? அவர்கள் எந்தக் கட்சியில் இங்கு போட்டியிடுகின்றனர்? அவர்கள் வெற்றி பெற்றால் யாருடன் இணைந்து கொள்வார்கள்? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடியிருக்கின்றீர்களா?
சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கஜன் இங்கு போட்டியிடுகின்றார். அவரது கட்சித் தலைவரும், அவரது கட்சியும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே எந்தக் கட்சியில் யாருடைய தலைமையில் இணைந்து போட்டியிடுகின்றன? ராஜபக்சக்களின் குடும்பக் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இரண்டறக் கலந்துதான் அவர்கள் போட்டியிடுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயருடன் ஏன் போட்டியிடுகின்றார்கள் என்று சிந்தித்துப் பார்த்தீர்களா?

மக்களே ஏமாந்துவிடாதீர்கள்
கோத்தாபயவின் முகத்துடன் களமிறங்கினால் ஜனாதிபதித் தேர்தலில் வாங்கிய அடியை விட மோசமாக வாங்க வேண்டி வரும் என்று தெரிந்துதான், கோத்தாபய, அங்கஜன் என்ற முகம் ஊடாக யாழ்ப்பாணத்தில் களமிறங்கியுள்ளார். மக்களே நீங்கள் விழிப்பாக இல்லாவிட்டால், கோத்தாபயவுக்கு வாக்களித்து அங்கீகாரம் கொடுப்பது போலாகிவிடும்.
அங்கஜன் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றால் அது அவரின் வெற்றியாக அமையாது. கோத்தாபயவின் கொள்கைகளையும் தமிழ் மக்கள் ஏற்று அங்கீகரிப்பது போன்றுதான் அமையும். அதற்கு நீங்கள் இடமளிக்கப் போகின்றீர்களா? கலர் கலரான பிரசுரங்களை அடித்து விட்டு, கவர்ச்சியாக படங்களைப் போட்டு விஞ்ஞாபனம் அடித்து விட்டு உங்கள் வாக்குகளை சூறையாடி கோத்தாவுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் அங்கஜனுக்காக நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா? 8 மாதங்களுக்கு முன்னர் நீங்கள் அடித்து விரட்டிய கோத்தாபயவுக்கு, இப்போது வாக்கிடப் போகின்றீர்களா?

**டக்ளஸ் செய்தவற்றை மறந்துவிட்டீர்களா?**

அமைச்சராக வலம் வரும் டக்ளஸ் கடந்த காலங்களில் என்ன செய்தார் என்பதை மறந்து விட்டீர்களா? 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோத்தாபயவுடன் இணைந்து அவர் இங்கு என்ன செய்தார் என்பதை மறந்து விட்டீர்களா?
வீதிக்கு வீதி சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் உங்களது பிள்ளைகள் இல்லையா? ஊரடங்கு நேரத்தில் இரவில் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் உங்கள் இரத்தமில்லையா? இராணுவத் துணைக்குழுவாக இயங்கி காட்டிக் கொடுத்தவர்களை மறந்து விட்டீர்களா?
டக்ளஸ் தேவானந்தா யாருடைய அமைச்சரவையில் அமைச்சராக இருக்கின்றார்? அவரின் எஜமானார் யார்? கோத்தபாய. கோத்தாபயவின் ஒரு முகம் அங்கஜன் என்றால் மறுமுகம் டக்ளஸ். டக்ளஸ் வெற்றி பெற்றால் யாருடன் கூட்டுச் சேருவார்? நீங்கள் இரண்டரை லட்சம் வாக்குகளால் தோற்கடித்த கோத்தாவுடன்தான் அவர் கூட்டுச் சேர்வார். கோத்தபாயவை நாம் ஒரு தடவை விரட்டி அடித்துவிட்டோம். ஆனாலும், அவரின் கைக்கூலிகளாக, ஏவலாளிகளாக இங்கு வலம் வருபவர்களையும் இந்தத் தேர்தலுடன் அடித்து விரட்ட வேண்டும். எங்கள் சொந்தங்களை குருதி சிந்த வைத்த கோத்தாவை மறுபடியும் தோற்கடிக்க ஒரு வாய்ப்பு ஓகஸ்ட் 5ஆம் திகதி உங்களைத் தேடி வருகின்றது. கோத்தாவின் அடியாளர்களான டக்ளஸ், அங்கஜனை தோற்கடிப்பதன் ஊடாக அதனை நீங்கள் செய்யவேண்டும், என்றார். (ஓ,5)

## வவுனியாவில்.....

வாரம். அழைப்பாணை விடுத்திருந்தது.
ஈஸ்டர் தாக்குதல் குண்டுதாக்குதல் தொடர்பிலான விவகாரம் ஒன்று குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ரிஷாத், கட்டாயம் ஆஜராக வேண்டுமென, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இந்த அழைப்பாணையை விடுத்திருந்தார்.
ரிஷாத்தின் தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைக்கு அழைப்பதை, தேர்தல் முடியும் வரை இடைநிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல் ஆணையாளர் எழுத்துமூலம் அறிவித்திருந்த நிலையிலும், இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.
இதேவேளை குறித்த விசாரணையை வவுனியாவில் முன்னெடுக்குமாறு சட்டத்தரணிகளூடாக கோட்டை நீதிமன்றில் ரிஷாத் மனுத்தாக்கல்செய்திருந்தார்.
அதனை ஆராய்ந்த கோட்டை நீதவான் ,வவுனியா இரட்டைப்பெரியகுளம் பொலிஸ்நிலையத்தில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரிவில் இன்று ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறு பணித்திருந்தார். அதற்கமைய இன்று காலை10 மணிக்கு வவுனியா இரட்டைப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வாக்குமூலத்தை வழங்கினார். (அ,110)

## இன்றும்...

நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு கடந்த 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்போது நீரியல்வளத் திணைக்களத்தினர் மன்றுக்கு சமுகமளிக்காததால், இன்று 27 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இன்று இந்த வழக்கு பதில் நீதிவான் முன்னிலையில் எடுக்கப்பட்டபோதும், நீரியல்வளத் திணைக்களத்தினர் மன்றுக்கு சமுகமளித்திருக்கவில்லை. இதனால் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (அ-26)

## சமஷ்டியை...

கம்பஹாவில் நேற்று ஞாயிறுக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,
" அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் நாட்டில் ஆட்சி முறைமை பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசியல் ரீதியிலும் பலவீனப்படுத்துவதற்காகவே மாகாணசபைமுறைமை கொண்டுவரப்பட்டது. நாம் சமஷ்டி முறைமைக்குச் சென்றிருந்தால் இந்நேரம் என்ன நடந்திருக்கும்? கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக வடக்கு, கிழக்கில் ஒரு விதத்திலும், தெற்கில் இன்னுமொரு விதத்திலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும்.
வடக்கு, கிழக்குக்கு இந்தியாவில் இருந்து படகுகளில் வந்து, குடியேறியிருப்பார்கள். நடக்கவேண்டிய எல்லா விபரீதங்களும் நடந்திருக்கும்.
அதேவேளை, அரசியலமைப்பில் உள்ளவாறு 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று சஜித் பிரேமதாச குறிப்பிடுகின்றார். அதாவது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களும் வழங்கப்படும் என்பதையே அவர் குறிப்பிட்டுள்ளார். இது அரசியல் ரீதியில் ஆட்சியை பலவீனப்படுத்தும் செயலாகும்." என்றார். (அ,44)

## போதைப் பொருளுடன்...

ருளை உடைமையில் வைத்திருந்த 25 வயதான பெண்ணைக் கைது செய்துள்ளனர். அவரிடம் இருந்து ஒரு கிலோ கிராம் கேரளக் கஞ்சாவும், 2 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமையுடன், கைது செய்யப்பட்ட பெண்ணை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன் றத்தில் இன்று ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ,110)

## புலிகளின் அரசியல் பிரிவு...

வெளியிட்டிருந்தேன். அந்த சட்டத்தால்தான் நாட்டில் பல பிரச்சினைகள் உருவாகின. குறிப்பாக பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு ஜனாதிபதிக்கே இருக்கின்றது. பாதுகாப்பை ஏற்பாடுகளை பொலிஸாரே மெற்கொள்வார்கள். ஆனால், பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதியால் நியமிக்க முடியாத நிலை இச்சட்டத்தால் காணப்படுகின்றது.
அரசலமைப்பு பேரவையே உயர்பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இவ்விருவரும் இணைந்து ஐவரும், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவரும், சிறுகட்சிகளின் சார்பில் ஒருவருமாக 9 பேர் இதில் அங்கம் வகிப்பார்கள். சபாநாயகர் இருந்தாலும் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.
எனவே, 9 பேரில் எழுவர் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பக்கம் இருப்பார்கள். சம்பந்தனே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். சம்பந்தன் என்பவர் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர். போர் தொடர்பில் ரணிலின் நிலைப்பாடு என்னவென்பதும் எமக்கு தெரியும்.
ஜனாதிபதிக்கே மக்கள் ஆணை வழங்குகின்றனர். ஆனால், நியமனங்களை வழங்குவது வேறு நபர்கள். இதனால்தான் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பிலும் சர்ச்சை மூண்டது. பண்டைய காலம் தொட்டு ஒற்றையாட்சி முறைமையையும், எமது அடையாளங்களையும் எமது முதாதையர்கள் பாதுகாத்து வந்தனர். உயிர் தியாகமும் செய்துள்ளனர். இவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்த நாட்டிலேயே பலவந்தமாக திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமூலம் சமஷ்டி கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் இல்லாவிட்டால் சமஷ்டி அமுலுக்கு வரும் நிலைமை காணப்படுகின்றது.
13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என சஜித் கூறுகின்றார். அவ்வாறு நடைபெற்றால் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை எவராவது உரிய வகையில் உறுதிப்படுத்தினால் 13 இற்கு அப்பால்செல்வதற்குகூட தயார் என்றே மஹிந்த ராஜபக்ச கூறியிருந்தார். 13 பிளஸ் அமுல்படுத்தப்படும் என அவர் அறிவிக்கவில்லை என்றே நான் நினைக்கின்றேன். தமிழர்களுக்கு இந்த நாட்டில் அநீதி இழைக்கப்படவில்லை. தென்பகுதிகளில் உள்ள பலகலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்கின்றனர். ஆனால், வடக்கில் எமது மாணவர்களுக்கு அவ்வாறானதொரு நிலை இல்லை. இனவாதிகளின் கைகளுக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள அதிகாரங்கள் சென்றால் என்ன நடக்கும்? பொலிஸ், காணி மற்றும் தொல்லியல் தொடர்பான அதிகாரங்களும் உள்ளன. எனவே, இப்படியானவர்களின் கைகளுக்கு அதிகாரங்கள் சென்றால் நமக்கு நாடு மிஞ்சுமா? தனி ஈழம் நோக்கி பயணிப்பதை தடுத்து நிறுத்த முடியுமா? எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை நிராகரிப்பதற்கு மக்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. " - என்றார். (அ,44)

# இந்திய மாநிலங்களில் ஐ.எஸ். பயங்கரவாதிகள்

## ஐ.நா. அறிக்கையில் தகவல்




ஐ.நா.வின் பகுப்பாய்வு ஆதரவு மற்றும் தடைகள் கண்காணிப்புக்குழுவின் பயங்கரவாதிகள் தொடர்பான 26ஆவது அறிக்கையில், இந்தியாவின் கேரளா மற்றும் கர்நாடகாவில் கணிசமான எண்ணிக்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் உள்ளனர் என்று கூறப்பட்டு உள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

2019ஆம் ஆண்டு மே மாதம் அறிவிக்கப்பட்ட ஐ.எஸ். அமைப்பின் இந்திய கிளையில் (ஹிந்த் விலயா) 180 முதல் 200 வரை உறுப்பினர்கள் உள்ளனர் என்று உறுப்பு நாடு ஒன்று தெரிவித்து ள்ளது. இந்தியாவின் கேரளா மற்றும் கர்நாடகாவில் கணிசமான எண்ணிக்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் உள்ளனர்.

ஐ.எஸ்., அல்கொய்தா மற்றும் இவற்றுடன் தொடர்புடைய அமைப்புகள், ஆப்கானிஸ்தானின் நிம்ருஸ், ஹெல்மந்த், காந்தகார் மாகாணங்களில் இயங்கி வரும் தலிபான் அமைப்பின் கீழ் இந்திய துணைக்கண்டத்தில் இயங்கி வருகின்றன என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி1)



# வெளிநாட்டு மாணவர்கள் நுழையத் தடைவிதிப்பு

## மீண்டும் குழப்பும் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜூலை 27

அமெரிக்கா முழுவதும் ஒன்லைன் மூலம் பாடம் நடத்தும் பல்கலைக்கழகங்களில் புதிதாகக் கல்வி கற்க வரும் வெளிநாட்டு மாணவர்கள் அமெரிக்காவுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அந்நாட்டின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கு அந்நாட்டு குடியுரிமைத்துறை அனுப்பியுள்ள அறிக்கையில், மார்ச் 9 ஆம் திகதிக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படாமல் உள்ள மாணவர்கள் ஒன்லைன் வகுப்புகளில் சேர விரும்பினால் அவர்களுக்கு விசா வழங்கப்படமாட்டாது. அவர்கள் அமெரிக்காவில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் முழுவதும் ஒன்லைன் வகுப்புகளை நடத்தும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றுவரும் வெளிநாட்டு மாணவர்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க குடியுரிமைத்துறை அண்மையில் உத்தரவிட்டு பின்னர் அதனை மீளப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

- விமர்சனம்

# 'தில் பெச்சாரா'



புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வாழ்நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் இருவர் காதலில் இணைந்தால் அதுதான் 'தில் பெச்சாரா'.

சுஷாந்த் சிங்கின் மரணத்துக்குப் பிறகு வெளியாகியிருக்கிறது அவர் நடித்த கடைசித் திரைப்படம்.

புற்றுநோயாளிகளின் இயல்பான வாழ்க்கைக்கான ஏக்கத்தையும் வலியையும் எவ்வித அதிக எமோஷனலும் இன்றி கடத்திவிட்டுச் செல்லும் இடத்திலேயே நாயகி சஞ்சனா சங்கி கவர்ந்து விடுகிறார்.

'கை போச்சே', 'கேதார்நாத்', 'எம்.எஸ். தோனி', 'சிச்சோரே' என சுஷாந்த்தின் முந்தைய படங்கள் பலவும் வெற்றி, தோல்வி, ஏமாற்றம், இறப்பு என வாழ்க்கையின் மீதான மனிதனின் போராட்டத்தை பற்றிப் பேசியவைதான். சுஷாந்த்தின் படங்களில் எல்லாம் இறப்பு குறித்தும், தோல்வி குறித்தும் தத்துவார்த்தமாக ஏதாவது பேசப்பட்டிருக்கும். இயற்கையாகவே சுஷாந்துக்கு அப்படிப்பட்ட படங்கள் அமைந்திருந்தமை பேராச்சர்யம்தான். இப்போது 'தில் பெச்சாரா'விலும் மரண வலியோடு புன்னகைக்கும் மேனி என்ற புற்றுநோயாளியாக வாழ்ந்திருக்கிறார் சுஷாந்த்.

வாழ்வுக்கும், சாவுக்கும் இடைப்பட்ட இறுதி நாள்களில் நின்று உரையாடிவிட்டு சென்றிருக்கிறார் சுஷாந்த். நாயகியின் அப்பாவுடன் மழையில் பியர் குடித்துக் கொண்டே பேசும் ஒரு காட்சி போதும் சுஷாந்தின் தேர்ந்த நடிப்பை பாராட்ட! கேன்சர் நோயாளிகளுக்கு நோய் ஏற்படுத்தும் வலியை விட பிறர் காட்டும் பரிதாபமும், பொதுவில் கலந்துகொள்ளவிடாமல் தங்களுக்கென கொடுக்கப்படும் பிரத்தியேக சலுகைகளுமே பெரும் மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடும். இந்த உணர்வை அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார் சுஷாந்த்.

நோய் பாதிப்பால் சரிந்துவிழும் இடமாகட்டும், தன்னுடைய இறுதி அஞ்சலியை தானே பார்க்க விரும்பும் இடமாகட்டும். இந்தக் காட்சிகளை பார்க்கும்போதெல்லாம் படத்திலும் சரி, நிஜத்திலும் சரி... 'We Miss You!' சுஷாந்த். அதிலும் அந்த ஓப்பனிங் பாடலில் ஒரே டேக்கில் ஆடிப்பாடியதெல்லாம் மெர்சல்! இன்னும் கொஞ்சம் வாழ்ந்துவிட்டு சென்றிருக்கலாமே சுஷாந்த்?

நாயகியின் அம்மா - அப்பா கதாப்பாத்திரத்தில் வருபவர்கள், சுஷாந்த்தின் நண்பராக கண்ணில் புற்றுநோய் பாதிப்பு கொண்ட நபர் என துணைக் கதாபாத்திரங்களில் வரும் எல்லாருமே சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.



புற்றுநோய் ஏற்படுத்தும் வலி வேதனையோடு காதலையும் குழைத்து ஏ.ஆர். ரஹ்மான் இசைத்துள்ள பாடல்களும் பின்னணி இசையும் படத்தை செம 'க்ளாஸ்' அந்தஸ்த்துக்கு உயர்த்துகிறது. அதுவும் சுஷாந்த்தின் கடைசி நிமிடங்களுக்கு ஏ.ஆர்.ஆரின் பிஜிஎம் மொத்தமாகவே மனதை உருக்கிவிடும்.

வழவழவென இழுப்பதற்கும், இன்னும் காட்சிகளைச் சேர்ப்பதற்கும் பல வாய்ப்புகள் இருந்தும் சொல்ல வந்ததை நச்சென சொல்லி, தேவையான காட்சிகளை மட்டும் வைத்து 100 நிமிடங்களுக்குள் படத்தை முடித்ததற்காக இயக்குநர் முகேஷ் சாப்ராவுக்குப் பெரிய பாராட்டு.

'ஒட்டுமொத்த ரசிகர்களும் சுஷாந்தின் முழுமையான அன்பால் மட்டுமே இன்று 'தில் பெச்சாரா'வை கொண்டாடி வருகின்றனர். இந்த நேரத்தில் இந்தப் படத்தில் சயிஃப் அலிகான் பேசும் ஒரு வசனத்தைத்தான் சுஷாந்த்தை நோக்கி சொல்லத் தோன்றுகிறது.

It is illegal to die by Suicide...' நீங்கள் வாழ்ந்திருக்க வேண்டும் சுஷாந்த். நீங்கள் ஆசைப்பட்டதைப் போன்றே இன்னொரு ரஜினியாக, இன்னொரு சூப்பர் ஸ்டாராக... வாழ்ந்திருக்கலாமே சுஷாந்த்!



# பி.எஸ்.ஜி. சாம்பியன்

பாரிஸ், ஜூலை 27

பிரெஞ்சுக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் பி.எஸ்.ஜி. அணி 10 என்ற கோல் கணக்கில் எடின்னேவை தோற்கடித்து 13 ஆவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.

பிரான்ஸில், கழகங்களுக்கிடையிலான பிரெஞ்சுக் கிண்ணக் கால்பந்துப் போட்டி நடந்து வந்தது. கொரோனா பாதிப்பால் 4 மாதங்களாக தடைப்பட்டிருந்த இந்த போட்டியின் இறுதிச் சுற்றில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.), செயின்ட் எடின்னே அணிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோதின. 5 ஆயிரத்திற்கும் குறைவான ரசிகர்கள் மைதானத்தினுள் அனுமதிக்கப்பட்டனர். விறுவிறுப்பான இந்த மோதலில் பி.எஸ்.ஜி. அணி 10 என்ற கோல் கணக்கில் எடின்னேவைத் தோற்கடித்து 13 ஆவது முறையாக கிண்ணத்தை வென்றது. பி.எஸ்.ஜி. அணியில் நட்சத்திர வீரர் நெய்மார் 14 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். (ரி2)

# கொரோனாவிலிருந்து மீண்ட பின்னர், ஏற்படும் உடல்நல பிரச்சினைகள்



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபடி இருந்தாலும், தொற்றிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. என்றாலும், அவ்வாறு மீண்டவர்களுக்கும் கொரோனா அறிகுறிகள் தொடர்வதாகச் சொல்லப்படுகிறது.

நோய் பாதிப்பிலிருந்தபோதும் மருத்துவமனையிலிருந்தபோதும் நோயாளிகளைக் கண்காணிக்கும் மருத்துவர்களும் அரசாங்கமும், அவர்கள் வீடு திரும்பிய பிறகு கண்காணிப்பதில்லை. இதனால் கொரோனாவிலிருந்து மீண்ட பிறகும் நீடிக்கும் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது எனத் தெரியாமல் பலர் குழம்பி வருகின்றனர்.

“கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர்களுக்கு உடல்வலி, சோர்வு ஆகிய வை பரவலாகக் காணப்படுகின்றன. கொரோனா தொற்றின்போது வாசம், சுவையை அறியமுடியாத நிலை ஏற்படும். அது சரியாக சிறிது நாள்கள் ஆகும். சிலருக்கு 10 நாள்களுக்கு மேல் தேவைப்படுகிறது. பசியுணர்வும் தொற்றிலிருந்து மீண்டவர்களுக்குக் குறைந்தே காணப்படுகிறது. தூக்கமின்மை பிரச்சினையும் பரவலாக உள்ளது. தொற்று ஏற்பட்டபோது இருந்த பயம், பதற்றம் காரணமாக தூக்கமின்மை நீடிக்கிறது. சிலருக்கு இந்த அறிகுறிகள் எல்லாம் ஒரு மாதம்வரைகூட நீடிக்கலாம்”

“கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்கள் விற்றமின் சி, மல்டி விற்றமின் போன்றவற்றை மருத்துவ ஆலோசனை பெற்று உட்கொள்வதன் மூலம் அவர்களின் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். எதிர்ப்பு சக்தியைக் கூட்டும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். உடலில் நீர்ச்சத்துக் குறைபாட்டால்கூட உடல்வலி, சோர்வு ஏற்படலாம். அதனால் தண்ணீர் சத்து குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். புரதம் நிறைந்த உணவு முறை அவசியம். ஆவி பிடிப்பதையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலும், அவர்களுக்கு இருக்கும் மற்ற நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளைத் தவறாது எடுக்க வேண்டும். உடல்வலி அதிகமாக இருந்தால் வலி நிவாரண மருந்துகளை மருத்துவர் ஆலோசனையுடன் எடுத்துக்கொள்ளலாம். முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், கைகளைச் சுத்தப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்களும் பின்பற்ற வேண்டியவை.

தியானம், மூச்சுப் பயிற்சி, யோகா ஆகியவற்றை மேற்கொள்ளலாம். மூச்சுப் பயிற்சி நுரையீரலின் திறனை அதிகரிக்கக் கைகொடுக்கும். தியானத்தின் மூலம் மன அமைதி கிடைக்கும் என்றும் துறைசார் நிபுணர்கள் கூறுகின்றனர்.

# தனிமைப்படுத்தப்பட்டோர் வாக்களிக்க இடமில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு இறுதி நேரத்தில் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் வாக்களிப்பதற்குரிய ஏற்பாடுகள் எவையும் செய்யப்படமாட்டா என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னதாக அவர்கள் வாக்களிப்பதற்கு எதிர்வரும் 31ஆம் திகதி ஏற்பாடு செய்யப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இருப்பினும், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நடமாடும் வாக்குச் சாவடியை அமைப்பது கடினமான விடயம் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் நூற்றுக் கணக்கானோரே தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் மருத்துவமனைகளில் ஆயிரக்கணக்கானோர் நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு வாக்களிப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. இவ்வாறான நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானோருக்கு மாத்திரம் ஏன் சிறப்பு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

சட்டவிவகாரங்களில் சிக்காமல் இருப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு, தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளோருக்கு எதிர்வரும் 31ஆம் திகதி நடத்த இருந்த வாக்களிப்பை இரத்துச் செய்யத் தீர்மானித்துள்ளது. (ஓ,5)

# மன்னாரில் நகைகள்..

முறையில் பணம், நகைகள் திருடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சம்பவ தினத்தன்று மாலை அந்த அரச உத்தியோகத்தரின் வீட்டில் உள்ள அனைவரும் வெளியே சென்றுவிட்டு, இரவு 9 மணியளவிலேயே வீடு திரும்பினர். பின்னர் இரவுணவைக் கடையில் வாங்குவதற்காக வழக்கமாக பணம் வைக்கும் இடத்துக்குச் சென்று பார்த்தபோது, அங்கே அதனைக் காணவில்லை. உடனேயே அவர் அலுமாரியைப் பார்த்தபோது அங்கிருந்த நகைகளையும் காணாது திகைத்தனர். பின்னர் அவர்கள் ஆராய்ந்தபோது, வீட்டின் ஓடுகளைக் கழற்றி உள்நுழைந்த திருடர்களே அவற்றைக் களவாடிச் சென்றமை தெரியவந்தது. இதனையடுத்து 12 பவுண் கொண்ட தாலிக்கொடி, 3 பவுண் முறுக்கு காப்பு ஒன்று, முக்கால் பவுண் கொண்ட ஒரு சோடி கல் தோடு மற்றும் ஒரு சிறிய உடைந்த மோதிரமும் அத்துடன் 38 ஆயிரம் ரூபா பணமுமே திருடப்பட்டுள்ளன என மன்னார் பொலிஸில் முறையீடு செய்யப்பட்டது. பொலிஸார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர். (அ,60)

## ஆணின்....

ஸார் இன்று திங்கட்கிழமை காலை மீட்டுள்ளனர்.
தலைமன்னார் கடற்கரை பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கடற்கரையில் கரை ஒதுங்கிய சடலத்தை அவதானித்துள்ளனர்.
பின்னர் அவர்கள் கடற்படையினர் உடனடியாக தலைமன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து தலைமன்னார் பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ,60)

## வெலிக்கடையில்...

தடுப்பு தேசிய செயலணி தெரிவித்துள்ளது.
நேற்றுமட்டும் இலங்கையில் 12 பேர் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரையில் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 580ஆக அதி கரித்துள்ளமை குறிப்பி டப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 27.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.